# தொகுதிப் பங்கீடு: தி.மு.க. - ஆதித் தமிழர் பேரவை உள்ளிட்ட 8 கட்சிகள் பேச்சுவார்த்தை!










**சென்னை, மார்ச். 4 -**

**2026 சட்டப் பேரவை தேர்தலை யொட்டி கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சு வார்த்தை நடத்திட அமைக்கப்பட்ட கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. தலைமையிலான தி.மு.க. குழுவினர் நேற்று முன்தினம் (02.03,2026) அண்ணா அறிவாலயத்தில் 8 தோழமைக் கட்சிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தினர்.**

**இந்த பேச்சு வார்த்தையில்**

**ஆதித் தமிழர் பேரவை சார்பில்**

இரா,அதியமான்
(நிறுவனத் தலைவர்)
இரவிக்குமார் (பொதுச் செயலாளர்)
அ.முத்துகிருஷ்ணன்
(மாநில அமைப்புச் செயலாளர்)
சந்திரன் (துணைப் பொதுச் செயலாளர்) ஆகியோருடனும்,

**வல்லரசு பார்வர்டு பிளாக் சார்பில்**

பி.என்.அம்மாவாசித்தேவர்
(நிறுவன தலைவர்)
ஈ.சந்திரசேகரன்
(பொதுச் செயலாளர்)
கருப்பதேவர்
எம்.முருகானந்தம், ஆகியோருடனும்,

**ஆதித் தமிழர் கட்சி சார்பில்**

கு.ஜக்கையன்
(தலைவர்)
விஸ்வை குமார்
(பொதுச் செயலாளர்)
க.திலீபன்
(அமைப்புச் செயலாளர்)
விடுதலைக் குமார்
(மாநில ஆலோசகர்)
திருமுருகச் செல்வம் (துணைப் பொதுச் செயலாளர் ) ஆகியோருடனும்,

**தமிழ்ப் புலிகள் கட்சி சார்பில்**

நாகை, திருவள்ளுவன் (தலைவர்)
பேரறிவாளன் (பொதுச் செயலாளர்)
இளவேனில் (பொதுச் செயலாளர்)
சிறுத்தை செல்வன் (பொருளாளர்)
முத்துக்குமார் (செய்தி தொடர்பாளர்)
ராமச்சந்திரன் (துணை பொதுச் செயலாளர்) ஆகியோருடனும்,

**புதிய திராவிட கழகம் சார்பில்**

எஸ்.ராஜ்குமார் (தலைவர்)
ரவிச்சந்திரன்
(கிருஷ்ணகிரி மாவட்டச் செயலாளர்)
ஆர்.இம்மானுவேல் நாடார்
(மாநில அமைப்பு செயலாளர்)
சந்தோஷ் (கரூர் மாவட்டச் செயலாளர்)
காடையார் சரவணன் (மாநில பொருளாளர்) ஆகியோருடனும்,

**தமிழர் தேசம் கட்சி சார்பில்**

கே.கே.செல்வகுமார் (தலைவர்)
தளவாய் ராஜேஷ் (பொது செயலாளர்)
குரு.மணிகண்டன் (ஒருங்கிணைப் பாளர்)
எம்.ராஜேந்திரன் (இணை பொதுச் செயலாளர்)
கௌதம் (ஒருங்கிணைப்பாளர்) ஆகியோருடனும்,

**அகில இந்திய பசும்பொன் முன்னேற்றக் கழகம் சார்பில்**

ஏ.எம்.மூர்த்தி
பி.மணிகண்டன்
எஸ்.கதிர்
ஆர்.ஆரோன்
எஸ்.கே.உதயன் ஆகியோருடனும்,

**திராவிடத் தமிழர் கட்சி**

வெண்மணி (தலைவர்)
நெல்லை கதிரவன்
(பொதுச் செயலாளர்)
விஜயகுமார்
(தலைமை நிலைய செயலாளர்)
இள.கார்த்திகேயன்
(மாநில இளைஞரணி செயலாளர்)
ரங்கராஜ் (இளைஞர் அணி இணைச் செயலாளர்)
இரா.செந்தில்குமார் (மேற்கு மண்டல அமைப்பு செயலாளர்) ஆகியோருடனும் பேச்சு வார்த்தை நடத்தினர்.

### கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டத்தில்

## மாற்றுக் கட்சியினர் கழகத்தில் இணைந்தனர்!

### வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. முன்னிலையில்!

*ரிஷிவந்தியம், மார்ச். 4 -* கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டம், ரிஷிவந்தியம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, லாலாப் பேட்டை கூடலூர் கிராமத்தில் மாற்றுக்கட்சியினர் கழகத்தில் இணையும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதற்கு கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக செயலாளர், ரிஷி வந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க. கார்த்திகேயன் தலைமை தாங்கினார்.

ஒன்றிய செயலாளர் பெருமாள், தேர்தல் பணி குழு நிர்வாகி செல்வக்குமார், மாவட்டப் பொருளாளர் கோவிந்தராஜ், பொதுக்குழு உறுப்பினர் ராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ரிஷி வந்தியம் தொகுதியின் மேலிடபார்வை யாளர் ச.அ.பெருநற் கிள்ளி வாழ்த்துரை வழங்கினார்.

விழாவில் ரிஷிவந்தியம் ஒன்றிய அ.தி.மு.க. வர்த்தக அணி நிர்வாகி சசிக்குமார் என்ற பாபு, அதிமுக மாவட்ட வழக்கறிஞர் அணி இணை செயலாளர் அருள்தாசன், அதிமுக மாவட்ட எம்ஜிஆர் மன்ற இணை செயலாளர், கீழத் தேனூர் அதிமுக கிளை செயலாளர் ஏழுமலை ஆகியோர் தங்களது ஆதரவாளர்கள் ஆண்கள், பெண்கள், இளைஞர்கள் சுமார் 500க்கும் மேற்பட்டோருடன் நமது கழகத்தில் தங்களை இணைத்துக்கொண்டனர்,

தொடர்ந்து புதிதாக கழகத்தில் இணைந்த அனைவரையும் வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ கழக இரு வண்ண வேஷ்டிகள் மற்றும் சேலைகள் அணிவித்து அன்புடன் வரவேற்று வாழ்த்து தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து அவர் பேசுகையில், தமிழக முதல்வர், கழகத் தலைவர், சமூக நீதி காவலர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழக மக்களுக்காக 24 மணி நேரமும் உழைத்துக் கொண்டு வருகிறார், கடந்த ஐந்து ஆண்டுகளில் பல்வேறு எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்,

ஒவ்வொரு வீட்டிலும் நமது திட்டங்கள் சென்றடையாத குடும்பங்களே கிடையாது, இதில் மாற்று கட்சிகள் சேர்ந்த குடும்பத்திற்கும் நமது திராவிட மாடல் அரசின் பல்வேறு திட்டங்கள் போய் சேர்ந்து வருகின்றன,

ஆகவே நமது திராவிட மாடல் நல்லாட்சியின் மகத்தான திட்டங்களால் மாற்றுக் கட்சியினர் தாமாக முன்வந்து கழகத்தில் அதிக அளவில் நிறைந்து வருகின்றனர்,

புதிதாக கழகத்தில் இணைந்த உங்கள் அனைவருக்கும் உரிய மரியாதையுடன், அதிலும் குறிப்பாக புதிய பொறுப்புகள் வழங்கப்படும். இருந்த கட்சியில் வகித்த பதவியை விட உயர்வான பதவி உங்களை வந்தடையும். நீங்கள் செய்ய வேண்டிய பணி ஒன்று மட்டும் தான். நடைபெற உள்ள சட்டமன்றதேர்தலில் தி.மு.க.வின் வெற்றிக்கு உங்களின் அர்ப்பணிப்பு, உழைப்பு ஆகியவற்றை பலன் ரிஷிவந்தியம் தொகுதியில் குறைந்த பட்சம் 1 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வேண்டும் மீண்டும் திராவிட மாடல் ஆட்சி அமைய வேண்டும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் இரண்டாவது முறையாக தமிழக முதல்வராக பொறுப்பேற்க வேண்டும் அதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து பாடுபட வேண்டும் என்றார், முடிவில் மாவட்ட பிரதிநிதி சண்முகம் நன்றி கூறினார்.



திண்டுக்கல் – ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கீரனூர் பேரூராட்சி முன்னாள் அ.தி.மு.க. பேரூர் செயலாளரும், திண்டுக்கல் மேற்கு மாவட்ட அம்மா பேரவை இணைச் செயலாளருமான இ.குப்புசாமி தலைமையில் 200க்கும் மேற்பட்டோர் அக்கட்சியில் இருந்து விலகி மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அர. சக்கரபாணி முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். இந்நிகழ்வின்போது ராஜாமணி, சுப்பிரமணி, பொன்ராஜ், கருப்புசாமி, ஹாஜி அப்துல் சுக்கூர், கிருஷ்ணசாமி உள்ளிட்ட நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

### கோவை – ஈரோடு – சேலம் உள்ளிட்ட

## மேற்கு மண்டல பொறியாளர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

திராவிட முன்னேற்ற கழக பொறியாளர் அணி

### மாநில செயலாளர் எஸ்.கே.பி.கருணா அறிவிப்பு!

கோவை, ஈரோடு, சேலம் உள்ளிட்ட மேற்கு மண்டல பொறியாளர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று (4.3.2026 - புதன்கிழமை) காலை 10 மணி அளவில், கரூர் மாவட்டம் திருமுருகன் மண்டபத்தில் முன்னாள் அமைச்சர், மேற்கு மண்டல பொறுப்பாளர் வி.செந்திபாலாஜி எம்.எல்.ஏ. தலைமையில் , பொறியாளர் அணியின் தலைவர் துரை.கி.சரவணன், பொறியாளர் அணியின் கோவை மண்டல பொறுப்பாளர் கு.சண்முகசுந்தரம், ஈரோடு மண்டல பொறுப்பாளர் அம்பாள்.நந்தகுமார், சேலம் மண்டல பொறுப்பாளர் ஞானசேகரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறவிருக்கிறது.

கோவை, ஈரோடு, சேலம் மண்டல பொறியாளர் அணியின் மாவட்ட, மாநகர், பேரூர்,ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**பொருள்:**

திருச்சியில் 9.3.2026 அன்று நடைபெற உள்ள கழக நிர்வாகிகள் மாநாடு வருகைக்காக.

**எஸ்.கே.பி.கருணா**
செயலாளர்
மாநில பொறியாளர் அணி



இராணிப்பேட்டை நகராட்சி. வார்டு எண். 26 ல் நகராட்சி கல்வி நிதியின் கீழ் ரூ.16 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய அங்கன்வாடி மையக் கட்டிடத்தை கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் மாவட்டச் செயலாளர் ஆர்.காந்தி திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ஜெ.யு.சந்திரகலா, நகரமன்ற தலைவர் சுஜாதா வினோத், துணைத் தலைவர்ரமேஷ் கர்ணா. நகரமன்ற உறுப்பினர்கள் எஸ்.வினோத், எஸ்.கிருஷ்ணன, ஏர்டெல்.குமார், ஜெ.கோபிகிருஷ்ணா, ஜெயசங்கீதா, அசேன், எல்லப்பன் மற்றும் நகர பொருளாளர் ஏ.அமீத் ஆனந்தராஜ் குமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.